## ( Tamil Translation of the Paris Principles )
## மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனங்களின் அந்தஸ்து, தொழிற்பாடு ஆகியவை தொடர்பான கோட்பாடுகள்.

**குறிப்பு** : தற்போதைய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களை மீளாய்வு செய்யவும் தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்ளவுமாக மனித உரிமைகள் நிலையம் 1991 ஒக்டோபர் மாதத்தில் ஒரு சர்வதேச செயலமர்வை ஏற்பாடு செய்தது. தேசிய நிறுவனங்கள், தேசங்கள், ஐ.நா அதன் முகவரங்கள், அரசிடை மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர்.

தற்போதைய ஏற்பாடுகள் பற்றி செயலமர்வில் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அத்துடன் தேசிய மனித உரிமைகள் கருவிகளின் வகிபங்கு, கூட்டமைவு, அந்தஸ்து, தொழிற்பாடு ஆகியவை பற்றி செயலமர்வின் பிரதிநிதிகள் முழுமையான விதந்துரைகளையும் முன்வைத்தனர். இவ்விதந்துரைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 1992 மார்ச் மாதத்திலும் (தீர்மானம் இல.1992/54) பொதுச்சபையினால் 1993 டிசம்பர் 20ம் திகதியிட்ட தீர்மானத்தின்படியும் அங்கீகரிக்கப்பட்டன. இவற்றின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

### அ) சட்ட உரிமைகளும் பொறுப்புகளும்

1. மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தக் கூடியதாக ஒரு தேசிய நிறுவனத்துக்கு சட்ட உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

2. ஒரு தேசிய நிறுவனத்தினது கூட்டமைவு, சட்ட உரிமைகளின் எல்லை ஆகியவற்றை யாப்புரீதியாக அல்லது சட்ட ரீதியாக குறிப்பாகவும் தெளிவாகவும் காட்டக் கூடியதான பரந்த ஆணை வழங்கப்படவேண்டும்.

3. ஒரு தேசிய நிறுவனம், ஏனையவை இருக்கத்தக்கதாக, பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும்:

   அ) மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவது தொடர்பான எந்தவொரு விடயத்தையும் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் கோரிக்கையின் பேரில் அல்லது ஒரு விடயத்தை எவ்வித உசாவுகை, அபிப்பிராயங்கள், விதந்துரைகள், முன் மொழிவுகள், அறிக்கைகள் ஆகியவை எதுவும் இல்லாமலேயே விசாரிப்பதற்கு தனக்கிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் ஓர் அறிவுரை பகரும் தளத்திலிருந்து அரசாங்கத்துக்கு, பாராளுமன்றத்துக்கு அல்லது எந்தவொரு அதிகாரம் கொண்ட அமைப்புக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். இவற்றைப் பிரசுரிக்கவும் தேசிய நிறுவனம் தீர்மானிக்கலாம். தேசிய நிறுவனத்தின் இத்தகைய அபிப்பிராயங்கள், முன் மொழிவுகள், அறிக்கைகள் மற்றும் தனிச்சிறப்புரிமைகள் பின்வரும் விடயங்கள் தொடர்பானவைகளாகும் :

i. மனித உரிமைகளை பேணிப்பாதுகாக்கும் நோக்குடைய ஏதேனும் சட்டவாக்க அல்லது நிர்வாக ஏற்பாடுகள்.

இத்தொடர்பில் தேசிய நிறுவனமானது தற்போதுள்ள சட்டவாக்கம் மற்றும் விர்வாக்க ஏற்பாடுகளையும், நிர்வாக ஏற்பாடுகளையும், மசோதாக்களையும், முன்மொழிவுகளையும் ஆய்வு செய்து இவையாவும் மனித உரிமைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைய இருப்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக பொருத்தமான விதந்துரைகளை முன் வைக்க முடியும். தேவையெனில் புதிய சட்டத்தை ஏற்றல், தற்போதைய சட்டத்தை திருத்தி ஏற்றல் அல்லது நிர்வாக ஏற்பாடுகளைத் திருத்துதல் ஆகியவற்றையும் விதந்துரைக்க முடியும் ;

ii. தான் கையேற்கத் தீர்மானிக்கும் மனித உரிமை மீறல் தொடர்பான எந்தவொரு சூழ்நிலை;

iii. பொதுவாக மனித உரிமைகள் பற்றியும் இன்னும் குறிப்பான விடயங்கள் பற்றியும் காணப்படக்கூடிய தேசிய நிலைமைகள் பற்றி அறிக்கைகளைத் தயாரித்தல்;

iv. நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மனித உரிமைகள் மீறப்படும் நிலைமை காணப்படின் அது பற்றி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து இத்தகைய நிலைமையை முடிவுக்குக் கொண்டுவரக் கூடியதாக அது எடுக்க வேண்டிய முனைப்புகளை முன் மொழிதல்; அது மட்டுமல்லாது தேவையான போது அரசின் நிலைப்பாடு மற்றும் எதிர்வினைகள் பற்றிய தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தல்;

ஆ) அரசு ஒரு பங்காளியாக விளங்குகின்ற சர்வதேச மனித உரிமை கருவிகளுடன் தேசிய சட்டவாக்கமும், ஒழுங்குகளும் நடைமுறைகளும் இசைந்திருப்பதையும் அவை வினைதிறனுடன் அமுல்படுத்தப்படுவதையும் மேம்படுத்துதலும் உறுதிப்படுத்தலும்;

இ) மேலே குறிப்பிட்ட கருவிகள் அல்லது அக்கருவிகளுடன் இணக்கம் பெறுதல் ஆகியவற்றை ஏற்பதை ஊக்குவித்தலும் அவற்றின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துதலும்;

ஈ) உடன்படிக்கை கடப்பாடுகளுக்கு அமைய ஐ.நா. அமைப்புகள், குழுக்கள் மற்றும் பிராந்திய நிறுவனங்களுக்கு அரசுகள் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளுக்கு பங்களிப்பு செய்தல்; தேவையெனில் அவற்றின் சுதந்திரத்துக்கு மதிப்பு வழங்கி அவ்விடயம் தொடர்பான ஓர் அபிப்பிராயத்தையும் வழங்குதல்;

உ) ஐ.நா, ஏனைய ஐ.நா. முகவரகங்கள், பிராந்திய நிறுவனங்கள், மற்றும் ஏனைய நாடுகளின் மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலில் சட்ட உரிமையுள்ள தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒத்துழைத்தல்;

ஊ) மனித உரிமைகளைக் கற்பித்தல், ஆய்வு செய்தல் ஆகியவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதிலும் அவற்றை பல்கலைக்கழகங்கள், மற்றும் தொழில் அமைப்புகள் மத்தியில் அமுல்படுத்துவதிலும் உதவுதல்.

எ) பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் மூலம் குறிப்பாக சகல விதமான பத்திரிகை ஊடகங்களையும் பயன்படுத்தி தகவல், கல்வி ஆகியவற்றின் மூலம் மனித உரிமைகளை பிரபல்யப்படுத்துவதோடு சகலவிதமான பாரபட்சங்களுக்கு குறிப்பாக இனத்துவ பாரபட்சத்துக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தல்.

**ஆ) கூட்டமைவு, உத்தரவாதங்கள் மற்றும் பன்மைத்துவம்**

1. தேசிய நிறுவனத்தின் கூட்டமைவும் அதன் உறுப்பினர்களின் நியமனமும் - தேர்தல் மூலமாக அல்லது வேறு விதத்தில் - சமூக சக்திகளின் (சிவில் சமூகத்தின்) பன்மைத்துவ பிரதிநிதித்துவத்தை உத்தரவாதமளிக்கும் செயன்முறையின் படி அமைக்கப்பட வேண்டும். அல்லது இது பின்வருவோரின் பிரதிநிதித்துவத்துடன் நடைபெற வேண்டும்: உதாரணமாக மனித உரிமைகளுக்கான பொறுப்புடைமையும் இனத்துவ பாரபட்சத்துக்கு எதிராக போராடுகின்ற அரசுசாரா நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், சம்பந்தமுள்ள சமூக, தொழில் வல்லுனர் நிறுவனங்கள் (உதாரணமாக சட்டத்தரணிகள், வைத்தியர்கள், பத்திரிகையாளர்கள், சிறந்த விஞ்ஞானிகள் முதலானோரின் சங்கங்கள்).

   மெய்யியல் சார்ந்த அல்லது சமயம் சார்ந்த சிந்தனைகள், செல்நெறிகள்;

   பல்கலைக்கழகங்கள், தகைமையுள்ள நிபுணர்கள்;

   பாராளுமன்றம்;

   அரசாங்க திணைக்களங்கள்; (இவைகள் சேர்க்கப்படுமிடத்து அவர்களது பிரதிநிதிகள் ஓர் அறிவுரைஞர் என்ற அடிப்படையில் மாத்திரம் செயற்பாடுகளில் பங்கு கொள்ளமுடியும்).

2. தேசிய நிறுவனமானது தனது செயற்பாடுகளை குறிப்பாக போதுமான நிதியீட்டம் முதலியவற்றை நல்ல முறையில் கொண்டு நடத்த வசதியளிக்கக் கூடிய வகையில் உட்கட்டமைப்பினை கொண்டிருக்க வேண்டும். இந்நிதியீட்டத்தின் நோக்கம் அரசாங்கத்திடமிருந்து சுதந்திரமாக இருக்கக்கூடியதாகவும் சுதந்திரத்தைப் பாதிக்கும் நிதிசார் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகாத வண்ணமும் தேசிய நிறுவனத்தை தனது சொந்த பணியாளர்களையும் இடத்தையும் கொண்டு இயங்க செய்வதாகும்.

3. நிறுவனத்தின் உறுப்பினர்கள் நிலையான ஆணையைக் கொண்டிருக்க வேண்டும். இது இல்லாவிட்டால் அவர்கள் உண்மையான சுதந்திரத்தைச் கொண்டிருக்க முடியாது. எனவே அவர்களது நியமனமானது ஓர் உத்தியோகபூர்வ சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள ஆணையின் காலம் நிச்சயிக்கப்பட்டிருப்பதோடு நிறுவனத்தின் உறுப்பினரின் பன்மைத்துவம் உறுதிப்படுத்தப்படின் இவ்வாணை புதுப்பிக்கப்படக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்;

**இ) இயங்கும் முறைகள்**

நிறுவனமானது தனது இயக்கத்தின் சட்டகத்துக்குள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளும்.

1. தனது சட்டவரம்புக்குள் வரக்கூடிய விடயங்களை சுதந்திரமாக கருத்திற் கொள்ளல். இவ்விடயங்கள் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டதாகவோ அல்லது உயர்மட்ட அமைப்பின் உசாவுகை அல்லாமல் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவோ அல்லது உறுப்பினர்களால் அல்லது ஏதேனும் மனுதாரரால் முன் மொழியப்பட்டதாகவோ இருக்கலாம்;

2. தனது சட்ட உரிமைக்குள் வரக்கூடிய சூழ்நிலையை கணிப்பீடு செய்வதற்கு ஒரு நபரை விசாரித்து உதவியான ஏதேனும் தகவல் அல்லது ஆவணங்களை பெறுதல்;

3. குறிப்பாக தனது அபிப்பிராயங்களையும் விதந்துரைகளையும் பிரபல்யப்படுத்துவதற்கு நேரடியாகவோ அல்லது பத்திரிகைகள் மூலமாகவோ பொது அபிப்பிராயத்தை கருத்திற் கொள்ளல் ;

4. கிரமமாகவும், தேவையானபடியும் சகல உறுப்பினர்களும் சந்தித்தல் வேண்டும். இவ்வாறு சந்திக்கும் முன்னர் அவர்கள் அனைவருடனும் உரியவாறு கலந்து பேசி இருத்தல் வேண்டும் ;
5. தேவையானவாறு உறுப்பினரிடையே பணிக்குழுக்களை ஸ்தாபிப்பதுடன் தனது தொழிற்பாடுகளில் உதவி செய்வதற்கு உள்ளூர் மற்றும் பிராந்திய பிரிவுகளையும் அமைத்தல் வேண்டும்.

6. மனித உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்துவதற்குப் பொறுப்பான (குறிப்பாக ஒம்புட்ஸ்மன், இடையீட்டாளர் மற்றும் தொடர்புள்ள இதைப்போன்ற நிறுவனங்கள்) நிறுவனங்களுடன்-அவை நீதி பரிபாலனம் சார்ந்தவைகளோ அல்லாதவைகளாகவோ இருக்கலாம் - கலந்துரையாடலை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
7. தேசிய நிறுவனங்களின் பணிகளை விரியவாக்குவதில் அரசு சாரா நிறுவனங்கள் ஆற்றும் முக்கிய வகிபங்கை கருத்தில் கொண்டு மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தல், சமூக, பொருளாதார விருத்தி, இனவாத எதிர்ப்பு, பலவீனமான குழுக்களைப் (குறிப்பாக

8. பிள்ளைகள், வந்தேறு தொழிலாளர், அகதிகள், உடல் ரீதியான மற்றும் உளரீதியான பாதிப்புக்கு உள்ளான நபர்கள்) பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு தம்மை அர்ப்பணித்துள்ள அரசு சாரா நிறுவனங்களுடன் தொடர்புகளை விருத்தி செய்தல்.

## ஈ) அரை - நீதிபரிபாலன சட்டவுரிமை கொண்ட ஆணைக்குழுக்களின் அந்தஸ்து தொடர்பான மேலதிகக் கோட்பாடுகள்

தனிப்பட்ட சூழ்நிலைகள் தொடர்பான முறைப்பாடுகளையும் மனுக்களையும் செவிமடுத்து ஆராய்வதற்கு ஒரு தேசிய நிறுவனத்துக்கு அதிகாரமளிக்கப்படலாம். தனிநபர்கள், அவர்களது பிரதிநிதிகள், மூன்றாவது பகுதியினர், அரசுசாரா நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் அல்லது வேறு ஏதேனும் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தமது பிரச்சினைகளை இந்நிறுவனத்திடம் முன்வைக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகள் மீது எவ்வித முற்சாய்வுமில்லாமல் அவர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்ட பணிகள் பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருக்கலாம்:

1. கட்டுப்படுத்தக்கூடிய தீர்மானங்கள் அல்லது தேவைப்படின் அந்தரங்க அடிப்படைகளின் ஊடாகவும் இணக்கம் அல்லது குறிக்கப்பட்ட சட்ட வரையறைகளின் அடிப்படையில் நட்பிணக்கமான தீர்வினைத் தேடுதல் ;

2. மனுச் செய்த தரப்பினரின் உரிமைகள், குறிப்பாக அவருக்கு இருக்கக்கூடிய பரிகாரங்கள் ஆகியவற்றை அறிவித்து அவற்றுக்கான அவரது பிரவேசவாய்ப்புகளையும் மேம்படுத்தல் ;

3. குறிக்கப்பட்ட சட்டவரையறைகளுக்குள் முறைப்பாடுகள் அல்லது மனுக்களுக்கு செவிமடுத்தல் அல்லது வேறு ஏதேனும் தகைமை கொண்ட அமைப்புக்கு அவற்றை அனுப்புதல் ;

4. விசேடமாக சட்டங்கள், ஒழுங்குகள் அல்லது நிர்வாக நடைமுறைகளை குறிப்பாக இவை தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள மனுச்செய்துள்ள நபர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தினால் அவற்றை திருத்தியமைப்பதற்கு அல்லது சீர்திருத்துவதற்கான விதந்துரைகளை தகைமையுள்ள அமைப்புகளுக்கு எடுத்துரைத்தல்.